Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 11, 2025

திங்கட்கிழமை 11, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர்: 025 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## A/L, O/L பரீட்சைகளுக்கான திகதி அறிவிப்பு

2025ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரணதர பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் உத்தியோகப்பூர்வ திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுபாஷினி இந்தியா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

அதன்படி க.பொ.த உயர்தர பரீட்சைகள் நவம்பர் 11ஆம் திகதி முதல் டிசெம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறும்.

தொடர்ச்சி P2




### முத்தையன்கட்டு இளைஞன் படுகொலை

# மக்களிடம் வாக்குமூலம் பெறுமாறு வலியுறுத்தல்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட முத்துஐயன்கட்டுப்பகுதியில் கடந்த 7ஆம் திகதி இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல் போய்த் தேடப்பட்டுவந்த நபர் முத்துஐயன்கட்டுக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட நிலையில், குறித்த விவகாரம் தொடர்பில் பொதுமக்களிடம் உடனடியாக வாக்குமூலங்களைப் பெறுவதுடன், துரிதகதியில் விசாரணைகளை மேற்கொண்டு, குற்றத்தில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென வன்னிமாவட்ட எம்.பி. துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இரவு இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல் போன நிலையில் தேடப்பட்டுவந்த முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட முத்துஐயன்கட்டு இடதுகரை, ஜீவநகர் பகுதியைச்சேர்ந்த 32 வயதான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்னும் குடும்பஸ்தர் முத்துஐயன்கட்டு குளத்திலிருந்து 9ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி அனுர அமெரிக்கா–ஜப்பானுக்கு விஜயம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எதிர்வரும் செப்டெம்பரில் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.

முதலில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபை (UNGA) கூட்டத்திற்காக அமெரிக்காவிற்கும், அதைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் உத்தியோபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது, ஜனாதிபதி செப்டெம்பர் 23ஆம் திகதி அமெரிக்காவுக்குப் புறப்பட்டு, 24ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றுவார்.

வெளியுறவுக் கொள்கை உட்பட தனது அரசாங்கத்தின் கொள்கைகளை கோடிட்டுக் காட்டுவார். அமர்வுகளின் போது அவர் பல உலகத் தலைவர்களைச் சந்திக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ரணிலின் சிறப்பு அறிக்கை



இளைஞர் சங்க இயக்கம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இளைஞர் சமூகங்கள் அரசியல்மயமாக்கப்படுவது மற்றும் இளைஞர் சமூகங்களிடையே தோன்றியுள்ள நெருக்கடிகள் குறித்து ஞாயிற்றுக்கிழமை (10) அன்று சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றும் போதே

தொடர்ச்சி P2

## NPP அரசாங்கத்திற்கு எதிராக களம் இறங்கும் முன்னாள் ஜனாதிபதிகள்



அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை நீக்கும் மசோதாவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து முன்னாள் நிறைவேற்று ஜனாதிபதிகளும் ஆரம்பகட்ட விவாதங்களை நடத்தியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் சட்டபூர்வமான நிலையை ஆராய அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் சுமார் 50 சட்டத்தரணிகள் கொண்ட குழுவை அணுகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவாதங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்காக முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகள் இணைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2



கண்டியில் நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகை பெரஹெரா வெற்றிகரமாக நிறைவடைந்ததை தெரியப்படுத்தும் ஆவணம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(மேலதிக செய்திகளுக்கு பக்கம் 6)

### மன்னார் சிந்துஜா மரணம்

## பணியிடை செய்யப்பட்ட மூவர் கைது





மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்பப் பெண் மரணத்துடன் தொடர்புடையதாகப் பணி நீக்கம் செய்யப்பட்ட வைத்தியர் ஒருவர் உள்ளடங்களாக ஐவரில் மூவர் சனிக்கிழமை (08) அன்று கைது செய்யப்பட்டுள்ளதாகச் சட்டத்தரணிர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அனைத்து மாகாணங்களிலும் குற்ற விசாரணை பிரிவு



அனைத்து மாகாணங்களிலும் குற்றவிசாரணை பிரிவுகளை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுக்கும் விசேட நடவடிக்கையின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தர்களால் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டுள்ளார்.

### தலதா பெரஹெரா

## தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு புதிய மைல்கல்



கண்டியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் நான்கு மகா தேவாலயங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் எசல மகா பெரஹெரா, பண்டைய சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளித்து சிறப்பான முறையில் நிறைவடைந்ததாக தெரியப்படுத்தும் ஆவணத்தை, தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல சனிக்கிழமை (09) மாலை கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி அனுகுமார திசாநாயக்கவிடம் வழங்கினார்.

ஊர்வலமாக ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த தலதா மாளிகை தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல உள்ளிட்ட நான்கு மகாதேவாலயங்கள் மற்றும் வெளியூர் தேவாலயங்களின் நிலமேகளுடன் இணைந்து,

தொடர்ச்சி P2

### இளைஞர் கழகங்கள்

## ஜே.வி.பியின் பணயக்கைதி



நீண்ட காலமாக, நமது நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்த இளைஞர் கழகங்கள் இப்போது முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்டு, தற்போதைய அரசாங்கத்தின் பகடைக்காயாக மாற்றப்பட்டு, ஜே.வி.பி.யின் அரசியல் பிடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வாக்குமூலம் பெறுமாறு வலியுறுத்தல்

குறிப்பாக கடந்த வியாழக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்ட குறித்த நபர் உள்ளடங்கலாக முத்துஐயன்கட்டு இடதுகரை ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த ஐவர், முத்துஐயன்கட்டுக் குளத்திற்கு அண்மைய பகுதியில் அமைந்துள்ள 63ஆவது படைப்பிரிவு இராணுவமுகாம் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவ்வாறு இளைஞர்கள் தாக்கப்பட்ட் சம்பவத்தை அறிந்து அப்பகுதி மக்கள் குறித்த பகுதிக்குச் சென்றபோது, ஒரு இளைஞனை இராணுவத்தினர் மிகக் கொடூரமாகத் தாக்கிக் கொண்டிருந்ததாக நேரில் பார்வையிட்ட ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இராணுவத்தால் தாக்கப்பட்ட இளைஞனை ஊர்மக்கள் காப்பாற்றச் சென்றபோது அவர்களையும் இராணுவத்தினர் தாக்கமுற்பட்டுள்ளதாக மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத்தொடர்ந்து ஊர்மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பலத்த முரண்பாட்டினையடுத்து, இராணுவத்தினர் இளைஞனை ஊர்மக்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் தாக்கப்பட்ட குறித்த இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இந்நிலையில் இராணுவத்தால் தாக்கப்பட்ட ஒருவர் காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போயிருந்த நபரை ஊர்மக்கள் இணைந்து முத்துஐயன்கட்டுக்குளத்தில் தேடியதுடன், கடந்த 08.08.2025 அன்று முத்துஐயன்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இத்தகைய சூழலிலேயே இராணுவத்தால் தாக்கப்பட்டுக் காணாமல் போயிருந்தநபர் 09.08.2025 காலை முத்துஐயன் கட்டுக்குளத்திலிருந்து சடலமாக இனங்காணப்பட்டிருந்தார்.

குறிப்பாக, முத்துஐயன்கட்டு இடதுகரை ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முத்துஐயன்கட்டுப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் குறைந்த விலையில் எரிபொருள் உள்ளிட்ட பொருட்களை வழங்கி வந்ததாகவும், இவ்வாறு இராணுவத்தால் இளைஞர்களுக்குப் பொருட்கள் வழங்கப்பட்டுவந்த பின்னணியிலேயே இராணுவத்தால் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இந்தக் கொலைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சூழலில் இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக மக்களிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறும், குற்றச்செயல்களில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக உரியாநடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் வன்னிமாவட்ட எம்.பி. துரைராசா ரவிகரன் இதன்போது பொலிஸாரிடம் வலியுறுத்தினார்.



## பரீட்சைகளுக்கான திகதி அறிவிப்பு

க.பொ.த சாதாரணதர பரீட்சைகள் 2026 ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறும் என்று அவர் மேலும் கூறினார்.

இரண்டு பரீட்சைகளுக்கான விரிவான கால அட்டவணைகள் மற்றும் நுழைவு அட்டைகள் அந்தந்த திகதிக்குள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி அனுர...

நியூயோர்க்கிலிருந்து, ஜனாதிபதி திசாநாயக்க செப்டம்பர் 27 அன்று ஜப்பானின் ஒசாகாவிற்கு எக்ஸ்போ 2025இல் கலந்து கொள்ளவும், இலங்கை தினத்தில் பங்கேற்கவும் பயணம் செய்வார், அங்கு நாட்டின் கலாச்சாரம், சுற்றுலா, வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை வெளிப்படுத்துவார்.

பிரதமர் ஷிகெரு இஷிபாவின் அழைப்பின் பேரில், ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ பயணம் செப்டெம்பர் 28ஆம் திகதி தொடங்கும்.

## NPP அரசாங்கத்திற்கு...



கடந்த ஞாயிற்றுக்கிழமை மால் ரோட்டில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகத்தில் முதற்கட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இது ரணில் விக்ரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இரண்டாவது விவாதம் வெள்ளிக்கிழமை (08) நடைபெற்றதாக அவர் கூறியுள்ளார்.

இதன்போது, சம்பந்தப்பட்ட மசோதா பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், அரசாங்கம் விரும்பியபடி அதை செயல்படுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அடுத்த 14 நாட்களுக்குள் இந்த புதிய மசோதாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முன்னாள் ஜனாதிபதிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

## பணியிடை செய்யப்பட்ட மூவர் கைது

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் ஜூலை மாதம் 28 ஆம் திகதி உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்பப் பெண்ணின் மரணத்திற்கு நீதி கோரி வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன .மருத்துவக் கவனயீனத்தால் ஏற்பட்ட அதீத இரத்தப்போக்குக் காரணமாகக் குறித்த இளம் தாயின் மரணம் சம்பவித்துள்ளது என மருத்துவப் பரிசோதனை அறிக்கை வெளி வந்தது.

இந்த நிலையில், கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் உள்ளடங்களாக இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாகக் குறித்த ஐவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த ஐவரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும்,இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் சனிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது, மன்னார் நீதவான் குறித்த மூவரையும் நாளை செவ்வாய்க்கிழமை 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் சந்தேக நபரான வைத்தியர் ஒருவரையும், தாதிய உத்தியோகத்தர் ஒருவரையும் கைது செய்ய உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இந்த நிலையில், குறித்த வழக்கு விசாரணை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## ரணிலின் சிறப்பு அறிக்கை

முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது,

இலங்கை இளைஞர்களின் வேண்டுகோளின் பேரில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு இளைஞர் சங்கத்தைத் தொடங்கினேன். அந்த இளைஞர் சங்கத்தின் மூலம் இளைஞர்களின் திறமைகளையும் திறன்களையும் வளர்ப்பதே எனது முக்கிய குறிக்கோளாக இருந்தது, இது கிராமத்தில் உள்ள இளைஞர்கள் பொழுதுபோக்குகள், கலை மற்றும் பிற செயல்பாடுகளுக்காக ஒன்றுகூடுவதற்கு ஒரு இடத்தை வழங்கும். அந்த இலக்கு மிகவும் வெற்றிகரமாக உள்ளது.

தற்போது, இளைஞர்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளில் பங்கேற்கின்றனர்.

இந்த நாற்பது ஆண்டுகளில், இளைஞர் சங்கங்கள் இந்த நாட்டின் முக்கிய இளைஞர் இயக்கமாக மாறிவிட்டன. இளைஞர் சங்கங்களிலிருந்து வந்த சிலர் அரசியலில் நுழைந்துள்ளனர். சிலர் வணிகங்களில் உள்ளனர். அவர்கள் அனைவரும் இந்த திட்டத்தை ஆதரிக்கின்றனர்.

சமீபத்தில், அமைச்சர் அரசியலமைப்பில் முன்மொழிந்த திருத்தங்கள் குறித்து ஒரு பெரிய கேள்வி எழுந்துள்ளது. எல்லா இடங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தற்போது தேசிய மாநாடு நடைபெற்று வருகிறது. எனக்கு கிடைத்த தகவலின்படி, அதன் பிறகும் போராட்டங்கள் நடத்தப்பட உள்ளன. இது தொடர்ந்தால், இளைஞர் சங்க இயக்கம் வீழ்ச்சியடையும். இளைஞர் சங்கங்களை அரசியல் மயமாக்குவதற்காகவே தொடர்புடைய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினையை அதிக தூரம் எடுத்துச் செல்லாமல் தீர்க்க வேண்டும்.

போராட்டம் நடத்தும் முன்னாள் அதிகாரிகள் குழு மற்றும் தற்போதைய மாவட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அனைவரையும் திருப்திப்படுத்தும் தீர்வை வழங்க வேண்டும்.

இந்த நாட்டின் இளைஞர்கள் சமூக அரசியலுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அது அமைச்சரும் இந்த இரண்டு குழுக்களும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு பணி. அந்தப் பணி செய்யப்படாவிட்டால், இந்தப் போராட்டங்கள் ஒரு அரசியல் பிரச்சினையாக மாறும். பின்னர் அரசியல் கட்சிகளும் இவற்றில் நுழையலாம். அது நடந்தால், இந்த இளைஞர் சமூக இயக்கம் மறைந்துவிடும். இந்த இளைஞர் சமூக இயக்கத்தைப் பாதுகாக்க விரும்புகிறேன். அதனால்தான் இந்த சிறு செய்தியை உங்களுக்கு வழங்க முடிவு செய்தேன் என்று முன்னாள் ஜனாதிபதி கூறினார்.

# தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு புதிய மைல்கல்

பாரம்பரியத்தின் படி ஜனாதிபதிக்கு அந்த ஆவணத்தை கையளித்தனர்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் ஜனாதிபதி மரக் கன்றொன்றை நட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெரஹெராவில் பங்கேற்ற கலைஞர்களுக்கு ஜனாதிபதி பரிசுகளையும் விருதுகளையும் வழங்கி வைத்தார்.

வெளி தேவாலாயங்களுக்கு எசல பெரஹெரா நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியையும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் கரங்களினால் வழங்கிவைக்கப்பட்டதோடு, மத்திய மாகாண கலாசார அமைச்சினால் தொகுக்கப்பட்ட 'புனித தலதா கலாசாரம்' என்ற நூலின் 20ஆவது தொகுதி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

அத்துடன், இலங்கை மக்கள் பௌத்த கலாசாரத்துடன் கட்டமைக்கப்பட்ட ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளனர். அதை கைவிட முடியாது, அதைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

மேலும், உலகிற்கு வெற்றிகளைக் கொண்டு வந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட புதிய மாற்றத்தை நாடென்ற வகையில் நாம் உள்வாங்க முடிந்ததா? என்று மீண்டும் நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும், நமக்குப் பின்னால் இருந்த பல நாடுகள், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்த நூற்றாண்டின் வெற்றிகளை தங்கள் சொந்த நாடுகளுக்கு விரைவாகப் பெற்றுத் தந்தன.

அதன்படி, உலகின் எதிர்காலத்தை கைப்பற்றவும், சில சமயங்களில் நமது வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாப்பதிலும் நாம் தோல்வியடைந்துள்ளோம். நமது தனித்துவமான எதிர்காலத்தையும் வளர்ச்சிப் பாதையையும் எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்ற சவால் மற்றும் கருத்தாடல் இன்று நம் முன் உள்ளது.

நமது தனித்துவமான பயணத்தைக் கண்டுபிடிப்பதிலும், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதிலும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் சாதனைகள் மற்றும் வரலாற்று பாரம்பரியத்தையும் உள்வாங்க வேண்டும்.

இந்த தலதா பெரஹெரா விழா ஒரு புதிய தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு மைல்கல் என்பதுடன், அத்தகைய கலாசார விழா நாட்டின் எதிர்காலத்திற்கான ஒரு ஈர்ப்பாக பொதுமக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும்.

இந்த பெரஹெராவை கண்டுகளித்த போது, ஏராளமான இளைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆற்றலுடனும் ஊர்வலத்தில் பயணிப்பதைக் கண்டேன். இதைப் பார்ப்பது நமது நாட்டிற்கு ஒரு எதிர்காலம் இருக்கிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சியையும் தைரியத்தையும் தருகிறது.

அதே நேரத்தில், இளம் சிறுவர்களும் முதியவர்களும் மிகுந்த ஆற்றலுடன் நடனமாடுவதைக் கண்டேன். இந்தக் கலாசார நிகழ்வுகளுடன் இணைக்கப்பட்ட ஒரு தேசமாக நாம் தொடர்ந்து முன்னேற விரும்புகிறோம். அதற்காக, நமது வரலாற்று பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்துடன் பொது மக்கள் இயல்பாக இணைவதற்கும் படிப்பதற்கும் சூழலை உருவாக்குவோம்."

நாட்டின் கலாசார மற்றும் வரலாற்று பாரம்பரியத்தைப் பாதுகாக்க ஒரு அரசியல் அதிகாரமாக வழங்கக்கூடிய மிக உச்ச ஆதரவு, தேவாலயங்கள் உள்ளிட்ட நிறுவன கட்டமைப்பிலிருந்து அரசியலை அகற்றி, அவற்றை வரலாற்றுப் பாதுகாவலர்களின் பாரம்பரியமாக மாற்றுவதாகும். இந்தக் கலாசார நடவடிக்கைகளுக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கும் அரசாங்கம் வழங்கும் நிதியுதவி தெளிவாக வேறுபடுத்தப்பட வேண்டும்.



கண்டியில் ஆண்டு தோறும் நடைபெறும் எசல மகா பெரஹெராவை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்கிய மல்வத்த-அஸ்கிரிய மகா நாயக்க தேரர்கள் தலைமையிலான மகா சங்கத்தினருக்கும், பெரஹெராவிற்கு தங்களை அர்ப்பணித்த தியவடன நிலமே, நான்கு மகா தேவாலயங்களின் நிலமேக்கள் மற்றும் அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் ஜனாதிபதி தனது நன்றிகள் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கண்டி மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த மற்றும் அரசாங்க அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட விருந்தினர்கள் குழு கலந்து கொண்டனர்.

## ஜே.வி.பியின் பணயக்கைதி

Citizen Voice வேலைத்திட்டத்தின் கீழ் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று இளைஞர் சம்மேளன உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், இளைஞர் கழகங்கள் சோசலிச இளைஞர் சங்கம் என்ற அரசியல் அமைப்பின் பணயக்கைதிகளாக மாறிவிட்டது. பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் தேசிய மட்டம் என்ற அடிப்படையில் செயல்பட்ட இளைஞர் சம்மேளனங்கள், இன்று இளைஞர் யுவதிகளின் ஆற்றல் திறமைக்கு இடம்கொடுக்காமல் ஜேவிபியின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளன. நியமிக்கப்படவுள்ள தேசிய இளைஞர் சம்மேளன தெரிவில் ஆளும் தரப்பினரின் அரசியல் ஆதரவாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரச அதிகாரம், அரசாங்கத்தின் அதிகாரம், அமைச்சு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் போன்றவற்றின் அதிகாரங்களைப் பயன்படுத்தி இளைஞர்கள் மீது அழுத்தங்களைச் செலுத்தி வருகின்றனர். தற்போதைய அரசாங்கம் இளைஞர்களிடமிருந்து பறித்த இளைஞர்களினது உரிமைகளை, ஜனநாயக உரிமைகளை இளைஞர்களுக்கு மீண்டும் பெற்றுத் தருவோம்.

அத்துடன், இந்த விடயத்தில் நாம் மிகவும் முற்போக்கான, ஜனநாயக ரீதியிலான முன்னெடுப்பை நோக்கி நகர்வோம். அரசாங்கம் செய்த இந்த தவறான செயல்முறையை கைவிடாவிட்டால் இந்த மோசமான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு பதிலளிக்க வேண்டி வரும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.



## ஜனாதிபதி தலைமையில் உலக ஆதிவாசிகள் தின தேசிய கொண்டாட்டம்

உலக ஆதிவாசிகள் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வைபவம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் சனிக்கிழமை (09) முற்பகல் தம்பான ஆதிவாசி அருங்காட்சியக வளாகத்தில் இடம்பெற்றது.
இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, 1996 ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடந்த ஆதிவாசிகள் மாநாட்டில் கலந்து கொண்டபோது, உலக ஆதிவாசிகள் தின வைபவத்தை இலங்கையில் கொண்டாடுவது குறித்த கருத்தாடல் ஆரம்பமாகியதுடன், அதன்படி, இலங்கையின் முதல் தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டம் 1999 ஆம் ஆண்டு கொழும்பு விஹார மகா தேவி பூங்காவில் நடைபெற்றது.
இந்த முறையும், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டத்தை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்ததுடன், அமைதி மற்றும் சுபீட்சத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்ட பாரம்பரிய "கிரி கொரஹா" சம்பிரதாயம் உட்பட ஆதிவாசிகளின் தனித்துவமான பல்வேறு கலாசார அம்சங்களுடன் இந்த நிகழ்வு வண்ணமயமாக இருந்தது.
ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, முன்னாள் ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே திஸாஹாமியின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியதோடு இந்த வைபவம் தொடங்கியதுடன், அருங்காட்சியக வளாகத்தில் ஜனாதிபதி, வெள்ளை சந்தன செடியையும் நட்டார்.
இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி ஶ்ரீ வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, ஆதிவாசியினரின் பிரச்சினைகள் அடங்கிய ஒரு மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததுடன், நினைவுப் பரிசொன்றையும் வழங்கிவைத்தார்.
ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் ஆதிவாசியின தலைவருக்கு அன்பளிப்பும் வழங்கி வைக்கப்பட்டது.
ஆதிவாசியின சமூகத்தினரின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக விற்பனை கூடங்கள் நிர்மாணிக்க ஆரம்பித்தல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் தேசிய வளங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இலங்கையில் முதல் ஆதிவாசி மூலிகை சவர்க்காரம் "கைரி" அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆயுர்வேத சவர்க்காரத் தயாரிப்பு பயிற்சியை நிறைவு செய்த ஆதிவாசியின பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் உட்பட கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.













### இராணுவத்தினரது நடத்தைகள்

# தமிழர் மீது ஆக்கிரமிப்பு கொள்வது போலுள்ளது

யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்த காலம் முடிந்தும் இராணுவத்தினரது ஒருசில நடத்தைகளும் செயற்பாடுகளும், பயங்கரவாத தடைச்சட்டமும் அமுலில் வைத்திருப்பது என்பது இன்னமும் தமிழர்கள் மீது ஆக்கிரமிப்பு மேற் கொள்வது போல் உள்ளது என வவுனியா மாநகரசபையின் துணை முதல்வர் பரமேஸ்வரன் கார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தில் இளைஞரது சடலம் மீட்கப்பட்டது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முல்லைத்தீவு பகுதியில் இராணுவம் வெளியேறும் பகுதியில் உள்ள பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக ஐந்து இளைஞர்களை அழைத்த இராணுவம் , குறித்த முகாம் அமைந்திருந்த பகுதியில் வைத்து இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அதிலிருந்து 4 இளைஞர்கள் தப்பியோடியதாகவும், ஒருவர் மாத்திரம் வெளிவரவில்லை எனவும், குறித்த நபருடைய சடலமே குளத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும், அவர்களது உறவினர்கள் மற்றும் ஊடகங்களூடாக செய்திகளை காணமுடிந்தது.

குறித்த இளைஞனின் மரணத்திற்கு இலங்கை இராணுவமே காரணமாக இருப்பின் இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தங்களை ஒரு விடிவெள்ளிபோலும், இன, மத, பேதமின்றி சகல மக்களுக்குமான நீதியான அரசை கட்டியெழுப்புவோம் என கூறி, மக்களின் வாக்குகளைப் பெற்ற இந்த அரசாங்கம் இன்றுவரை பயங்கரவாத தடைச்சட்டத்தை அகற்றாமல், ஒரு அரசியல் கைதியையேனும் விடுவிக்காமல், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு எந்த ஒரு ஆறுதலை கூட வழங்க முடியாத நிலையில் இருப்பதால் இந்த அரசாங்கம் மீது இப்போது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது

இலங்கை அரசு என்பது எப்போதும் தமிழர்களுக்கான நீதியை வழங்காது என்பது எமது கண்முன் புலப்படுகிறது கடந்தகாலங்களில் எனது கட்சியும் அரசாங்க சார்பாக இருந்திருப்பினும், அரசு தமிழர்களுக்கு எதிராக செயல்படும்போது அதற்கு எதிராகவும் குரல் கொடுத்தோம்.

இதேவேளை, குறித்த இளைஞனின் மரணத்திற்கு இராணுவம் காரணமாக இருப்பின், வடக்கு கிழக்கு தமிழர் தாயக பூமியில் உள்ள, தமிழ்பேசும் மக்கள் மாத்திரம் அல்ல, இலங்கை முழுவதும் உள்ள அனைத்து தமிழ் பேசும் உறவுகளும், இலங்கை அரசின் காட்டுமிராண்டி தனத்திற்கு எதிராக நிச்சயம் ஜனநாயக ரீதியில் மாபெரும் எழுச்சி போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

## மாடுகளை பிடித்து பொலிஸில் ஒப்படைத்த ஊழியர்கள்



**ஏ.எச் ஹஸ்பர்**

கிண்ணியா நகர சபை எல்லைக்குள் போக்குவரத்துக்கு இடையூறாகவும் விபத்துகளுக்கு காரணமாகவும் வீதிகளில் நடமாடும் மாடுகள் பிடிக்கப்படும் என பலமுறை அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

அதன் அடிப்படையில், சனிக்கிழமை (09) அன்று HA எனும் குறிகள் உள்ள மூன்று மாடுகள் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த மாடுகளின் உரிமையாளர் உடனடியாக நகர சபை நிர்வாகத்தை தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதான வீதி உட்பட பல வீதிகளில் கட்டாக்காளி மாடுகளின் இரவு நேர மற்றும் பகல் நேரங்களில் நடமாடுவதனால் பல விபத்து சம்பவங்கள் போக்குவரத்து அசௌகரியம் என ஏற்படுவதாக நகர சபையின் தவிசாளர் எம். எம்.மஹ்தியின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து இவ் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நகர சபை தவிசாளர் தெரிவித்தார்.

## சிவலிங்கம் பிரதிஷ்டைக்கான கட்டிடத்தின் அடிக்கல் நாட்டல்

**புகழிந்தன்**



சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கான கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை(08) நடைபெற்றது.

பாடசாலைக்குள் ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் நோக்கில் சிவலிங்கம் ஒன்றிற்கான கோரிக்கையை பாடசாலையின் இந்து மாமன்றத்தினர் முன்வைத்த வேளை சிவபூமி அறக்கட்டளையினரால் சிவலிங்கம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்நிலையில், அந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கு கட்டிடத்தை அமைப்பதற்கான நிதியை தென்னாடு சைவ மகா சபையினர் வழங்கினர். அந்த வகையில் தமிழ் முறைப்படி மந்திரங்கள் உச்சரித்து, பூஜை வழிபாடுகளின் பின்னர் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

பாடசாலையின் பதில் அதிபர் வதனி தில்லைச்செல்வனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்துமாமன்ற பொறுப்பாசிரியர் யோ.கேதீஸன், வலயத்தின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், தென்னாடு சைவ மகா சபையின் பிரதிநிதிகள் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டினர்.



### நீரோடைக்கு அருகில்

## மது அருந்தியவர் சடலமாக மீட்பு

**ரஸீன் ரஸ்மின்**



புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாராக்குடிவில் பகுதியில் உள்ள சிறிய நீரோடைக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை (09) அன்று மீட்கப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பசறையைச் சேர்ந்த 48 வயதுடைய குறித்த நபர், முந்தல் - அங்குனவில் பகுதியில் உள்ள தும்பு தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றி வந்துள்ள துடன் வெள்ளிக்கிழமை (08) அன்று தனது சம்பளத்தை பெற்றுக் கொண்டு தாராக்குடிவில் உள்ள சிறிய நீரோடைக்குள் இன்னொருவருடன் இணைந்து மது அருந்தியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீதவான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு ள்ளதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சடலமாக மீட்கப்பட்டவருடன் இணைந்து மது அருந்தியதாக கூறப்படும் நபர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸாரும், புத்தளம் பிராந்திய பொலிஸ் தடயவியல் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய தூதரக அதிகாரிகளுடன் இ.தோ.க. சந்திப்பு

**பி.கேதீஸ்**



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள், இந்திய தூதரக அதிகாரிகளை நுவரெலியா கிரேன்ட் ஹோட்டலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை(10) அன்று சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் டாக்டர் சத்தியாஞ்சல் பாண்டே மற்றும் இந்திய இணை உயர்ஸ்தானிகர் (கண்டி) வீ.எஸ்.சரண்யா ஆகியோரை சந்தித்தனர்.

இந்த சந்திப்பில், இரு நாட்டு நட்புறவு, தொழிலாளர் நலன், சமூக முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன்போது இ.தொ.கா சார்பில் நிதிச்செயலாளரும், தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாநகர சபை பிரதி மேயர் சிவன் ஜோதி யோகராஜ், கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத், அமைப்பாளர் சின்னையா பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோவிலுக்கு செல்லவிடாததால் உயிரை மாய்த்து கொண்ட சிறுவன்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள சாளம்பங்கேணி பிரதேசத்தில் தாந்தாமலை கோயிலுக்கு பெற்றோர் போக விடாததால் 12 வயதுடைய சிறுவன் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வெள்ளிக்கிழமை (08) அன்று வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சாளம்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதுடைய பிரகலாதன் நிஷாந் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் சம்பவ தினத்தன்று தந்தாமலை கோவிலுக்கு போவதாக பெற்றோரிடம் கோரிய நிலையில் அதற்கு பெற்றோர் மறுப்பு தெரிவித்து சனிக்கிழமை(09) அன்று தீர்த்த உற்சவத்திற்கு போகலாம் என தெரிவித்த நிலையில் மனமுடைந்த சிறுவன் வீட்டின் அறையொன்றில் தன் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்க ப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்வீட்டு நெருக்கடிகளைத் தவிர்க்க வேண்டும்

கடந்த வாரத்தின் பிற்பகுதியில் அரசியல்வட்டாரத்தில் பரவலாகப் பேசப்பட்ட விடயம், பிரதமர் ஹரிணி பாராளுமன்றத்தில் ஆற்றிய ரொக்கட் சம்பந்தப்பட்ட பதில் உரை மற்றும், அதனைத் தொடர்ந்து மறுநாள் அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பிலுள்ள அமைச்சர் ஒருவர் அதில் காணப்பட்ட தவறை சுட்டிக்காட்டி திருத்தியமை மற்றும் வார இறுதியில் இந்த விடயம் பற்றிக் குறித்த செய்மதி நிறுவனமும், அரசாங்கத்தின் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சரும் ஆற்றிய உரைகள்.

உண்மையில் பிரதமர் ஆற்றிய உரையின் போது, குறித்த செய்மதியினால் இதுவரையில் எய்தப்பட்டுள்ள வருமானம் தொடர்பில் தவறான புள்ளி விபரம் முன்வைக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிட வேண்டும். வழமையாக உயர்ந்த பெறுமதிகளைக் கொண்ட இலக்கங்களை வாசிக்கும் போது, கற்றவர்களுக்கும் தடுமாற்றம் வருவதைக் கடந்த காலப் பாராளுமன்ற அமர்வுகளிலும் காண முடிந்தது. எனவே, இது தற்போதைய பிரதமருக்கு மாத்திரம் புதிய விடயமல்ல.

பிரதமரின் உரையைத் தொடர்ந்து, பல வருடங்களாக காணாமல் போனதாகக் கூறப்பட்ட ராஜபக்சர்களின் ரொக்கட் அரசாங்கத்தினால் கண்டு பிடிக்கப்பட்டு விட்டது போன்ற ஏளனம் செய்யும் சமூக வலைத் தளப் பதிவுகள் ஆக்கிரமிக்க ஆரம்பித்திருந்த நிலையில், மறுநாள் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஒன்றறை மணிநேர உரையாற்றியிருந்த போதிலும், இந்த விடயம் தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அவர் ஒரு சில நிமிடங்களை ஒதுக்கி, இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கலாம்.

மாறாக, அரசாங்கத்தில் சர்ச்சைகளுக்கு முகங்கொடுத்து வரும் ஓர் அமைச்சர் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்த முன்வந்திருந்தமை எரியும் விளக்கல்எண்ணெய் ஊற்றியிருந்ததை போல, சமூக வலைத்தள பதிவாளர்களுக்குத் தீனியூட்டியிருந்தது. பிரதமர் என்பவர் நாட்டின் இரண்டவது நபர். அவரின் உரையில் தவறைக் குறிப்பிடுவதானால் அதனை ஜனாதிபதி மேற்கொண்டிருந்தால் சிறப்பானதாக அமைந்திருக்கும். அதைப் பற்றி அரசாங்கம் சிந்திக்கத் தவறிவிட்டது போலும். குறித்த செய்மதி செயலில் இருப்பதாக அந்தச் செய்மதியை விண்ணில் ஏவிய நிறுவனத்தின் பேச்சாளர் அறிக்கை வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்து, வார இறுதியில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் குறிப்பிடுகையில், இந்த விடயம் உண்மையாக இருக்குமானால், ராஜபக்ஷர்கள் கண்டிப்பாகப் பலன்பெறுவார்கள் என்ற தொனியில், விசாரணைகள் தொடரும் என தெரிவித்திருந்தார். விசாரணைகளை முடித்துவிட்டு இந்த விடயம் பற்றி தெளிவான முறையில் பதில்களை வழங்கியிருக்கலாம். பிரதமரும் அதற்கான காலத்தைப் பாராளுமன்றத்தில் கோரியிருக்கலாம்.

இது போன்ற நெருக்கடிகளைத் தேடி வாங்கிக் கொள்ளும் செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்ப்பதனூடாக, அதன் மீது மக்கள் கொண்டுள்ள ஆதரவு மற்றும் நம்பிக்கை தொடர்வதற்கு வழிகோலப்படும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஒற்றுமையின்மையே தமிழரின் இயலாமை

**லக்ஸ்மன்**

ஜெனிவாவில் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் அமர்வுக்கு, “தமிழ்த் தரப்பில் பிரதான, பெரிய கட்சியை இணைத்துக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எழுதினால், அது அனைத்துலக அரங்கில் எப்படிப் பார்க்கப்படும்?” என்ற கேள்வி ஒன்று தற்போது தமிழ்த் தேசிய அரங்கில் பேசப்படுகின்ற விடயமாக மாறியிருக்கிறது. கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பில் நடைபெற்ற சந்திப்பு மற்றும் தயாரிக்கப்பட்ட கடிதம் தொடர்பிலேயே இந்தக் கருத்து வெளிவருகிறது.

தமிழர்களுக்கு நீதி வேண்டி, அனைத்துலகை விசாரணைப் பொறிமுறையைக் கோரும் தமிழர் தரப்பு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஐ.நாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. அந்தக் கூட்டுக்கடிதத்தின் தொடர்ச்சியாக மேலும் ஒரு கடிதத்தை அனுப்பும் வகையில், அதற்கான தயாரிப்பு வேலைகளுக்காக இந்தச் சந்திப்பு நடைபெற்றருந்தது. ஆனால், அந்தச் சந்திப்புக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி சமூகமளிக்கவில்லை. இந்த நிலையில்தான் இந்தத் தமிழ்த் தரப்பில் பிரதான, பெரிய கட்சியை இணைத்துக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எழுதினால், அது அனைத்துலக அரங்கில் எப்படிப் பார்க்கப்படும்? என்ற கேள்வி உருவாகியிருக்கிறது. தமிழரசுக் கட்சி இதில் இணைந்துக் கொள்ளவில்லை என்பது உண்மையாக இருந்தாலும் இணைத்துக் கொள்ளாமல் என்ற சொற் பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் ஒருவித தீர்மானத்துடன், பிடிவாதத்துடன், தனிக்காட்டு ராஜா நிலைமையில் செயற்படுவதே தெரிகிறது.

இருந்தாலும், அவர்களால் உருவாக்கப்படும் மாயைத் தோற்றத்தை உண்மையாக்கும் செயற்பாடுகள் தமிழர் தளத்தில் நடைபெறுகிறது என்றே இந்தக்கருத்தினை அடிப்படையில் கொண்டு பார்க்க முடியும். அதே போன்றதொரு நிலையே விடுதலைப்புலிகளின் தலைமையின் முழுமையான பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைக் கலைத்த பெருமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இருந்தாலும் முழுப் பழியும் கூட்டமைப்பில் இணைந்திருந்த மற்றைய கட்சிகளின் மீதே சுமத்தப்பட்டு வருகிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சி தாமாக விலகிக் கொள்ள முடிவெடுத்திருந்தாலும், அது தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய அரசியல் பிழை என்பதை யாரும் கடுமையாகச் சொல்வதற்கல்ல சாதாரணமாகக் கூறுவதற்குக் கூட தயாரில்லை. தனிப்பட்ட ஒருவருடைய, ஒரு கட்சியினுடைய விடயங்கள் எழுந்தமானமாக, ஏகபோகத்தனத்துடன் மேற்கொள்ளப்படுவது யாராலும் கேள்விக் குட்படுத்தப்படாதிருப்பது என்வோ சரியாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்களின் பொதுவான விடங்களில் எழுந்தமானமாகச் செயற்படுவது பொருத்தமானதாக இருக்காது என்பது ஒரு கட்சிக்குப் புரியாதிருக்கையில் பொதுமைப்படக் கருத்துக்கள் வெளியிடப்படுவது ஒன்றும் முதல் தடவையல்ல என்ற வகையில் திருத்த வேண்டியவர்களைத் திருத்தியாகவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குத் தமிழ் மக்கள் வாந்தாகவேண்டும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா.வுக்கு எழுதப்பட்ட கடிதத்தை தயாரிப்பதற்கான ஆரம்பப்பணியை மன்னாரைச் சேர்ந்த சிவகரன் தொடங்கியிருந்தார். அதன்பின் ஒவ்வொருவராக இணைந்து முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில். மூன்றாவது சந்திப்பு மீண்டும் கிளிநொச்சியில் நடைபெற்று ஒரு கூட்டுக்கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் பிரதானமாக இனப்பிரச்சினைத் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொண்டிருக்காமல் பன்னாட்டு பரிந்துரைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது.

இரண்டாவதாக, போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்கினால், அதற்குக் காலவரையறை இருக்க வேண்டும் என்பதாக இருந்தது. இதனைத் தீர்மானிப்பதற்குப் பல வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்திருந்தது. வடக்கு, கிழக்கில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து சர்வதேசத்துக்கு ஒற்றுமையாக முதன் முதலில் எழுதியக் கடிதமாக இது அமைந்திருந்தது. அந்தக் கடிதத்தினால் சாதகமான விளைவேதும் கிடைக்கவில்லை. பொறுப்புக்கூறல் சார்ந்த விடயங்கள் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கியே இருக்கிறது. சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்புத் திறமையாகச் செயற்பட்டதா என்ற சந்தேகம் இருக்கிறது. அந்தக் கட்டமைப்பு இலங்கைக்குள் வருகைதந்து செயற்பட இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில், இந்தச் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கின்ற ஐ.நா. கூட்டத் தொடருக்கு முன்னதாக தமிழ்த் தரப்பு மீண்டும் ஒரு கூட்டுக்கடிதத்தை அனுப்புவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இது பாராட்டத்தக்கதே. யானைக்கு மணியைக் கட்டுதல் என்கிற விடயம் நடைபெறாதிருக்கையில் யாரேனும் மணியைக் கட்டியானால் பிரச்சினை என்கிற தோரணை உருவாக்கப்படுவது தவறாகும். எல்லோருடைய நோக்கமும் ஒன்றாக இருக்கையில் யார் மணியைக் கட்டினால் என்ன என்று சிந்திக்கின்ற நேர்மை இல்லாமலிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

1948 தொடங்கி, ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்கத்தினால் தமிழர்களின் சுயநிர்ணயப் போராட்டம் கையாளப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் கையாளப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் இணைந்து கையாண்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கையாண்டிருக்கிறது. இப்போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் தமிழர் பிரச்சினைக் கையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடைபெறவிருக்கிறது. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கைக்கு வந்து போயிருக்கும் ஒரு பின்னணியில் இந்தக் கூட்டுக் கடிதத் தயாரிப்பு நடைபெற்றிருக்கிறது.

தமிழ் மக்கள் சர்வதேச நீதிப் பொறிமுறையைக் கோரிக் கொண்டிருக்கையில், புதிதாக ஆட்சியிலுள்ள அரசாங்கமும் உள்நாட்டுப் பொறிமுறைக்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் கருத்துக்களும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இல்லாதிருக்கின்ற அதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டுப் பொறிமுறையின் நம்பகத் தன்மையைப் பலப்படுத்துவதாகக் காணப்படுகிறது. எனவே, உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்தும் கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளாமல் அனைத்துலக விசாரணையை வலியுறுத்தவேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அக்கட்சி கலந்து கொள்ளவில்லை. இந்தக் கூட்டுக் கடிதத் தயாரிப்பில் கலந்து கொள்ளாத நிலையில், அக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நடத்திய ஊடகச் சந்திப்பில், தமது கட்சி கடிதம் ஒன்றை ஐ.நாவுக்கு அனுப்பியதாகவும், உள்நாட்டுப் பொறிமுறையைத் தாம் கோரவில்லை என்று கூறியிருக்கிறார். இதைப் பொறுப்புள்ள ஒரு தமிழ்த் தேசியக் கட்சியாக அவர் கூறுவதற்குக் காரணம் என்ன. கூட்டுக் கடிதத் தயாரிப்பில் கலந்து பங்குகொள்ளாதிருந்ததுடன், அவர் அதனைக் கைவிட்டிருக்கலாம். ஆனால், தம்முடைய அரசியலை செய்வதற்காக இதனைச் சொல்லியிருக்கிறார் என்பது மாத்திரம் வெளிப்படை. தமிழ் மக்களின் ஏகபோக அரசியல் தரப்புத் தாங்களே என விடுதலைப் புலிகள் தங்களை அறிவித்துக் கொண்டிருந்து பின்னர்த் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதற்காக உருவாக்கிக் கொண்டனர்.

ஆனால், ஆரம்பத்தில் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் யுத்த மௌனிப்பின் பின் ஒவ்வொன்றாக விலகிக் கொண்டன. விலக்கப்பட்டதாகக் கொள்ளலாமா என்பது இப்போதும் சந்தேகமானது. அத்துடன் விலக்கப்பட்டனவா, விலகிக் கொண்டனவா, விலகுவதற்கான சூழல் உருவாக்கப்பட்டதால் அது ஏற்பட்டதா என்பது இன்னமும் யாராலும் புரிதலுக்குட்படுத்தப்படவில்லை என்பது வேறு விடயம். இந்த நிலையில், ஒவ்வொரு விடயத்திற்கும் வியாக்கியானங்கள் முன்வைக்கப்படுவது நடைபெறுகிறது.

இவற்றினை ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையில் விளங்கிக் கொள்வதும், நடைபெற்றுவரும் தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கென்று செயற்படுகின்ற கட்சிகள் தாய்க் கட்சி, தந்தை கட்சி, ஏக தரப்பு என்றெல்லாம் நடந்து கொள்வது சர்வதேச தரப்புகளை அணுகுகின்ற வேளைகளிலும் தேவைதானா என்பதுவே கேள்வியாக இருக்கிறது.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைப் பேசுவதற்குத் திறக்கப்பட்டிருக்கும் ஒரே அனைத்துலக அரங்கம் ஐ.நா. என்ற வகையில், இதனைப் பலவீனமான நிலையுடன் அணுகுவதால் பயன் ஒன்று விளையுமா என்பதனை விளங்கிக் கொள்வது முக்கியமானது. ஆனால், பொறுப்புக்கூறலை அனைத்துலகை நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையோடு இனப்படுகொலையைத் திட்டமிட்டவகையில் நடத்தி வந்த ஒரு நாட்டில் இருந்து கொண்டு ஒற்றுமையின்மையுடன் அரசியல் நடத்துவதால் பயன் விளையுமானால் நல்லதே. ஈழத் தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தில் அனைத்துலக அரங்கில் தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டிக்கொள்ள, ஈர்த்துக் கொள்ளப் பரந்துபட்ட வேலைத் திட்டங்களில்லாத நிலையில், தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய விதத்தில் ஐ.நா. நகர்ந்துவரும் சூழலில் தமிழர் தரப்பின் ஒற்றுமையின்மை மேலும் பயனற்ற எதிர்காலத்தையே கொண்டுவரும் என்பதனை யாரும் மறந்துவிடக் கூடாது.

இது தமிழரசுக் கட்சிக்கும் புரிய வேண்டும். இல்லாதுவிடின் மக்களால் புரியவைக்கப்படுதலே நல்லது.



## வாழ்வியல் தரிசனம்

பொய் எதுவெனப் புரியவேண்டும், மெய் எதுவெனத் தெளிதல் வேண்டும். இந்தக் கருத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள், எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழும் வழி எதுவெனச் சொல்லிக் கொடுப்பவர்கள் இன்றியே, நற்குணங்களுடன் வாழும் உத்தமர்களும் இருக்கிறார்கள். தங்களது பெற்றோர்களின் வழிப்படியே இத்தகையவர்கள், தங்களது வாழ்வைச் சீரோடும் சிறப்போடும் அமைத்துக் கொள்கிறார்கள்.

வீடுகள்கூட, தெய்வீகம் நிறைந்திருக்கும் கோவில்களாக அமைய வேண்டும். பெற்றோரின் நடத்தைகள் தூய்மையுடன் இருந்தால், எல்லா இல்லங்களிலும் அதிர்ஷ்டம், நிம்மதி, அறிவு, மேன்மை, ஞானம், பக்தி, பெரியோர் உறவுகள், அன்பு, ஈகை எல்லாமே கைகூடிவரும். எந்தக் கெட்டவர்களின் காற்றுக்கூட அங்கு உள்நுழைய முடியாது பாதுகாக்கப்படும்.

இப்படிப்பட்ட மேன்மைகளுடன் வாழ்ந்த பரம்பரைகளைக் கண்டிருக்கின்றோம். இல்லத்தின் சுற்றாடல்களில் புனிதம் பேணப்படல் வேண்டும். புறச்சுற்றம் அகச்சுற்றத்துக்கு வழிகோலும்.

காலையில் எழுந்து காலைக்கடன் முடித்தவுடன், தெய்வ வழிபாட்டுடன் அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதிகாலைப் பொழுதில் தெளிந்த மனோநிலையில் கற்ற கல்வி நிலைத்து நிற்கும். விளையாட்டு, பொழுதுபோக்கு, வீட்டுவேலை என அனைத்து நல்ல சீரிய பழக்கங்களையும் இளமையில் பழகி வழக்கங்கள் ஆக்கிக்கொள்ளுதல் எங்கேயும் எப்போதும் சிறப்பைத்தரும். நல்ல குடும்பங்களால் பூமி சிறக்கின்றது..

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### “காணியை விடுவித்து தரவும்”

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர் விவசாய காணியை சூரிய மின் சக்திக்காக அபகரிக்கப்பட்ட நிலையில், அதனை விடுவிக்குமாறு அப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கை துறைமுக அதிகார சபை இதைக் கையகப்படுத்தி இரு தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கியுள்ளனர். இவ்விவசாய காணியை நம்பியே அப் பகுதி மக்கள் இதில் விவசாயம் செய்து வந்தனர். தற்போது சூரிய மின் சக்தி உற்பத்திக்காக சுமார் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதிகளை வேலி அடைத்து தங்களுடைய திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் இதில் 800 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில், கடந்த ஜூலை 29ஆம் திகதி அன்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது மாவட்ட செயலகம் முன் கவனயீர்ப்பில் ஈடுபட்ட விவசாயிகளை பொலிஸார் தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, தங்களுக்கு, நீதியான நியாயமான முறையில் அபகரிக்கப்பட்ட விவசாய காணியை விடுவித்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ஏ.எச்.ஹஸ்பர்




# தனிமனித தீர்மானம் பல கோடி மக்களை பாதிக்குமா?



ச.சேகர்

அமெரிக்க ஜனாதிபதியினால் தொடர்ந்து மாற்றப்படும் வரி விதிப்புகள் பற்றி தற்போது சில மாதங்களாகவே பேசப்படும் விடயமாக உள்ளது. ஆரம்பத்தில் இலங்கைக்கு 44 சதவீதம் என அறிவிக்கப்பட்ட வரி, படிப்படியாக குறைந்தது தற்போது 20 சதவீதமாகியுள்ளது. இதில் இலங்கையின் அதிகாரிகள் அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்ததுடன், அதில் அமெரிக்காவுடன் உடன்பட்ட விடயங்கள் பற்றி பொது வெளியில் அறிவிக்கப்படவில்லை. இது குறித்து நாட்டின் எதிர்தரப்பினர் வெளிப்படுத்துமாறு கேள்வி எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், அமெரிக்காவிலிருந்து வாகனங்களை தீர்வை இன்றி இறக்குமதி செய்யுமாறு இலங்கையிடம் கடந்த வாரம் அமெரிக்காவிடமிருந்து கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. உடனடியாக இந்த விடயம் தொடர்பில் இலங்கை தரப்பு எவ்விதமான பதில்களையும் வழங்காத போதிலும், இந்த விடயத்துக்கு கீழே மீண்டும் வருவோம்.

இது ஒருபுறமிருக்க, கடந்த வாரத்தின் பேசு பொருளாக இந்தியாவின் மீது அமெரிக்க அதிபர் அறிவித்திருந்த 25 சதவீத மேலதிக வரி விதிப்பு பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. குறிப்பாக ரஷ்யாவிடமிருந்து இந்தியா எரிபொருள் இறக்குமதி செய்வதை கண்டிக்கும் வகையில் இந்த வரி அதிகரிப்பை இந்தியா மீது மேற்கொள்வதாக ஜனாதிபதி ட்ரம்ப் தமது உரையில் தெரிவித்திருந்தார்.

உண்மையில் ரஷ்யாவிடமிருந்து இந்தியா மட்டும் தானா எரிபொருள் கொள்வனவு செய்கிறது? பிராந்தியத்தில் மேலும் பல நாடுகள் ரஷ்ய எரிபொருளை இறக்குமதி செய்கின்றன. அவ்வாறிருக்க இந்தியா மீது மாத்திரம் இந்த மேலதிக வரி விதிப்பை ட்ரம்ப் மேற்கொள்வதற்கு, எரிபொருளுக்கு அப்பாலான சில காரணிகள் இருக்கக்கூடும்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நட்பு நிலை தொடர்ந்த வண்ணமுள்ளது. குறிப்பாக, இந்திய பிரதமர் மோடிக்கும், அமெரிக்க அதிபர் ட்ரம்புக்குமிடையே சிறந்த நட்புறவு உள்ளது. அதை அவர்கள் பல தடவை பொது வெளியில் பகிரங்கமாக தெரியப்படுத்தியுள்ளனர்.

ஆனாலும், சமீபத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மூண்ட முறுகல் நிலையின் போது, அதில் தலையிட்டு இரு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலையை இல்லாமல் செய்வதில் ட்ரம்ப் பங்காற்றியிருந்தார். முதன் முதலில் இரு நாடுகளுக்குமிடையே ஒரு யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ளது என்பதை ட்ரம்ப் உலகுக்கு அறிவித்தார்.

அதற்காக ட்ரப்ம்பிற்கு சமாதானத்துக்கான நோபல் பரிசை வழங்குமாறு பாகிஸ்தான் பரிந்துரை செய்ததாக அறிவித்தது. ஆனாலும், இந்தியா அவ்வாறான எவ்விதமான அறிவித்தலையும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக, தமக்கு எவ்விதமான வெளி அழுத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை, சுயமாக யுத்த நிறுத்தத்துக்கு முன்வந்ததாக இந்தியா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால், தெற்காசிய பிராந்தியத்தில் மூழவிருந்த மாபெரும் ஒரு யுத்தம், ஒரு அணு ஆயுத பிரயோக போரை தாம் தவிர்க்க பேச்சுகளில் ஈடுபட்ட போதிலும், அது தொடர்பில் தமக்கு எவ்விதமான நன்றியை அல்லது பதிலை இந்தியா தெரிவிக்கவில்லை எனும் ஒரு அதிருப்தி நிலை ட்ரம்ப்புக்கு இருந்திருக்கலாம். அதனை வெளிப்பாடாகவும், இந்த அதிகரித்த வரி விதிப்பு அமைந்திருக்கும்.

மேலும், இந்த ரஷ்ய எரிபொருள் விவகாரம் தொடர்பில் இந்தியாவின் முக்கிய உயர்மட்ட பிரமுகர் ஒருவருடன் அமெரிக்க உயர்மட்டக்குழு பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்ட போது, ட்ரம்ப் தரப்பிலிருந்து, ரஷ்ய இறக்குமதியை நிறுத்துமாறு இந்தியாவுக்கு உறுதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. உக்ரேனுடன் ரஷ்யா மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகளுக்கு இந்த வியாபார கொடுக்கல் வாங்கல்கள் மறைமுகமாக சாதகமாக அமைந்துள்ளன என்பது ட்ரம்ப் தரப்பின் வாதமாக அமைந்திருந்த போதிலும், உலகின் மாபெரும் வல்லரசு எனும் தனது நிலையை, தொடர்ந்தும் உறுதி செய்யும் வகையிலான ஆணவப் போக்கிலமைந்த ஒரு அழுத்தப் பிரயோகமாகவே இந்தியா மீதான இந்த அழுத்தம் அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், உலகில் வேகமான வளர்ச்சியைக் கொண்டுள்ள நாடு இந்தியா. உலகின் நான்காவது வலுவான பொருளாதார நாடு எனும் நிலைக்கு இந்தியா உயர்ந்துள்ளது. மூன்று தசாப்த காலப்பகுதிக்கு முன்பிருந்த இந்தியா அல்ல தற்போதைய இந்தியா. பல துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், உலகப் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு மாபெரும் நாடாக திகழ்கிறது.

இதன் பின்புலத்தில், அமெரிக்க அதிபரின் அழுத்தமான கோரிக்கைக்கு செவிசாய்க்க இந்திய உயர்மட்டக்குழு மறுப்புத் தெரிவித்திருந்தது. தமது நாட்டின் இறையாண்மையில் இதர நாட்டின் தலையீட்டை வலுவான நிலையிலுள்ள எந்தவொரு நாடும் விரும்பாது. குறிப்பாக, இந்தியா போன்ற உலகின் வலுவான பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடு எந்நிலையிலும் விரும்பாது. அது இந்திய உயர்மட்டக்குழுவின் பேச்சுவார்த்தையின் போது தெளிவாக வெளிப்பட்டிருந்தது.

தமது பேச்சுக்கு மறுபேச்சை அல்லது மறுகருத்தைக்கூட விரும்பாத அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு இது பெரும் அடியாக அமைந்திருந்தது. இந்த சூடான பேச்சுவார்த்தை அமெரிக்கா - இந்தியா இடையிலான நட்பில் விரிசலை தோற்றுவித்துவிடுமோ எனும் ஒரு சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

சரி, மேலே நான் இலங்கையின் நிலை பற்றி குறிப்பிட்டிருந்த போது, அமெரிக்காவின் கோரிக்கை தொடர்பில் இலங்கை அமைதி காப்பது அல்லது உடனடியாக எவ்விதமான பதிலையும் வெளியிடாமை தொடர்பில் கீழே பார்க்கலாம் என குறிப்பிட்டிருந்தேன், அது இந்த பொருளாதார ரீதியான உறுதித் தன்மையைப் பற்றியதாகும்.

இந்தியாவின் நிலை, அந்த நாட்டின் பெருமளவான மக்கள் தொகை, அதன் வளங்கள், பேரம் பேசும் ஆற்றல், பொருளாதார வலிமை மற்றும் நாட்டின் தலைமையின் சிறந்த ஆளுமை போன்றன அமெரிக்கா போன்ற உலகின் வல்லரசின் கோரிக்கைக்கு உடனடியாக மறுப்புத் தெரிவிக்கக்கூடிய நிலைக்கு அதனை கொண்டு வந்துள்ளது.

குறிப்பாக, அமெரிக்காவின் பொருளாதாரத்தில் இந்தியாவின் ஆதிக்கம் செறிந்துள்ளது. தொழினுட்பம், பாதுகாப்பு, விண்வெளி ஆய்வுகள், பல அமெரிக்க தொழினுட்ப நிறுவனங்களின் மாபெரும் சந்தையாக இந்தியா அமைந்துள்ளது. 5 மில்லியனுக்கு அதிகமான இந்தியர்கள் அமெரிக்காவின் டயஸ்பொராக்களாக உள்ளனர். 3 இலட்சத்துக்கு அதிகமான இந்திய மாணவர்கள் அமெரிக்காவில் கல்வி பயில்கின்றனர். இவ்வாறு, அமெரிக்காவின் இயக்கத்தில் செல்வாக்கும் செலுத்தும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இந்தியா அமைந்துள்ளது. குறிப்பாக அமெரிக்கா-சீனா இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து, அந்த இடைவெளியை இந்தியா நன்றாக பயன்படுத்திக் கொண்டுள்ளது என்றே குறிப்பிடலாம்.

இலங்கைக்கு அவ்வாறான செல்வாக்குச் செலுத்தக்கூடிய காரணிகள் ஏதாவது உண்டா? பேரம் பேசக்கூடிய நிலையில் தான் இலங்கை உள்ளதா? இந்த பொருளாதார ஜாம்பவான்களின் மூளாப்போர் நிலையிலிருந்து இலங்கையின் தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களை கற்றுக் கொள்வார்களா?

பாராளுமன்றம் வந்து, எதிர்க்கட்சியை சாடி, பேச்சுவார்த்தைகளில் நாம் சாதித்துவிட்டோம், நம் அண்டை நாடு கோட்டைவிட்டுவிட்டது போன்ற தொனியில் பேசி, ஆபத்தில் கைகொடுத்த தோழனுக்கு ஆபத்து நேரும் போது, ஏளனச் சிரிப்பு செய்வது சரியா? அல்லது அந்நாடு மூன்று தசாப்த காலப்பகுதியில் அவ்வாறு எதிர்ப்பாற்றலைக் கொண்டிருக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளதே என எண்ணி, நாமும் அதை நோக்கிப் பயணிக்க வேண்டும் என திடசங்கற்பம் மேற்கொள்வது சரியா? உலகத் தலைவர்களே, அனைவரையும் சிரிக்க வைக்கும் தீர்மானங்களை மாற்றி மாற்றி மேற்கொள்ளும் போது, எமது தலைவர்கள் எம்மட்டில் இருக்கிறார்கள்?

# பரீட்சை மோக வெற்றியும் வாழ்க்கை திறன் தோல்வியும்

நிசார் முஹம்மத் நிஸ்மின்,
இரண்டாம் வருட,
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவன்,
கல்வி பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்.

இலங்கையின் கல்வி முறை, அதன் நீண்ட வரலாற்றினாலும், கணிசமான எழுத்தறிவு விகிதத்தாலும் பெருமை கொண்டிருந்தாலும், தற்காலப் பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளுக்குப் பொருத்தமற்ற சில அடிப்படைக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. பாடசாலை கல்வித் தரம் ஒன்று முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை, மாணவர்கள் பாடத்திட்டங்களை மனப்பாடம் செய்து, பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறுவதையே ஒரே இலக்காகக் கொண்டுள்ளனர். இந்த 'பரீட்சை மோகம்', மாணவர்களின் படைப்பாற்றல், பகுப்பாய்வுச் சிந்தனை, மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளைக் கடுமையாகக் குறைக்கிறது. இதன் விளைவாக, கல்வி முடித்து வெளிவரும் இளைஞர்கள், வெறும் ஏட்டுக்கல்வியுடன், வேலைச் சந்தைக்குத் தேவையான நடைமுறைத் திறன்கள் எதுவுமற்று வேலையின்மைப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையின் கல்வி முறையில் பரீட்சைகளுக்கு வழங்கப்படும் அதீத முக்கியத்துவம் ஒரு மையப் பிரச்சினையாகும். மாணவர்களின் ஒட்டுமொத்த கற்றல் அனுபவமும் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறுவதைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு மனப்பாடக் கல்வி முறையை ஊக்குவிக்கிறது. மாணவர்கள் பாடத்திட்டங்களை ஆழமாகப் புரிந்துகொள்வதை விட, பரீட்சைக்குத் தேவையான தகவல்களை மனனம் செய்து ஒப்புவிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். உதாரணமாக, உயர்தரப் பரீட்சை பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையாக, மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கருவியாகப் பார்க்கப்படுவதால், இந்தப் பரீட்சை மோகம் மேலும் தீவிரமடைகிறது.

இந்த அணுகுமுறை மாணவர்களின் மன அழுத்தத்தை அதிகரித்து. போட்டி மிகுந்த சூழல், தோல்வி குறித்த அச்சம், மற்றும் பெற்றோர், ஆசிரியர்களின் எதிர்பார்ப்புகள் மாணவர்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றன. ஏனெனில், இந்தப் பரீட்சைகள் பெரும்பாலும் தகவல்களை மீண்டும் பெறும் திறனை மட்டுமே சோதிக்கின்றனவே தவிர, புதிய சிந்தனைகளை உருவாக்குவதையோ அல்லது சிக்கல்களைத் தீர்ப்பதையோ அளவிடுவதில்லை. இதுவே, உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்கள்கூட நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனோ அல்லது புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் திறனோ இல்லாதவர்களாக வெளிவருவதற்குக் காரணம்.

வேலைவாய்ப்புத் திறன்கள் வழங்கப்படாமல் இருப்பது இலங்கையின் கல்வி முறையில் காணப்படும் மற்றொரு பெரும் குறைபாடு. பாடத்திட்டங்கள் பெரும்பாலும் கோட்பாட்டு அறிவை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளதன் விளைவாக, பட்டப்படிப்பை முடிக்கும் பட்டதாரிகள், தொழில்துறைக்குத் தேவையான பகுப்பாய்வுச் சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன், தகவல் தொடர்பு, குழுவாகப் பணியாற்றும் திறன், டிஜிட்டல் கல்வியறிவு, மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற சமகாலப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றை அடைவதில்லை. உலக வங்கியின் 2014ஆம் ஆண்டு அறிக்கை சுட்டிக்காட்டுவது போல், இலங்கையில் ஆண்டுக்கு சுமார் 140,000 மாணவர்கள் பொதுக் கல்வியை முடித்தாலும், அவர்களுக்கு வேலைக்குத் தேவையான திறன்கள் கிடைப்பதில்லை. 2018ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி, நாட்டின் கல்வி வீதம் 99.08% ஆக உயர்ந்திருந்தாலும், வேலையின்மை வீதம் 4.4% ஆக உள்ளது. இது, கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையே உள்ள மிகப்பெரிய இடைவெளியை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை கல்வி மற்றும் பயிற்சி அமைப்பு கூட வேலைச் சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சிகளை வழங்குவதில் சவால்களை எதிர்கொள்கிறது; செயன்முறை தொழில்நுட்பம் போன்ற பாடங்கள் பாடத்திட்டத்தில் இருந்தாலும், அவற்றைச் சரியான முறையில் கற்பிப்பதற்கான போதிய ஏற்பாடுகள், உபகரணங்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாதது இதற்கு ஒரு உதாரணம். இதனால், பட்டம் பெற்ற இளைஞர்கள், தாம் கற்ற கல்விக்கு ஏற்ற தொழிலைப் பெற முடியாமல் தவிக்கின்றனர்.

பாடசாலைக் கல்வி மட்டத்தில், கிராமப்புறப் பாடசாலைகளில் நிலவும் வளப்பற்றாக்குறை மற்றும் சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகள், மாணவர்களின் அடிப்படைத் திறன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன. உயர்கல்வி மட்டத்தில், கலைப் பிரிவுக் கல்வி ஏனைய பிரிவுகளைவிட புறக்கணிக்கப்பட்டு, அது குறைந்த மதிப்புடையதாகக் கருதப்படுவது ஒரு முக்கியப் பிரச்சினையாகும். பெரும்பாலான கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் வள பற்றாக்குறை காரணமாகக் தலைப்பிரிவுகளைத் தேர்ந்தெடுக்கும் நிலை, அவர்களின் ஆற்றல் குறைபாடு அல்ல, மாறாகக் கல்வி முறையின் சமத்துவமின்மையின் பிரதிபலிப்பு.

இந்தச் சவால்களை எதிர்கொள்ள, உடனடியான மற்றும் நீண்டகாலத் தீர்வுகள் அவசியம். இலங்கையின் கல்வி முறையை வேலை உலகிற்கு ஏற்றதாக மாற்ற, தேசிய கல்விக் கொள்கைச் சட்டகம் (2003) வலியுறுத்துவது போல், பாடசாலை முறைமை குழுவாகச் செயல்படல், முடிவெடுத்தல், சிக்கல் தீர்த்தல், தலைமைத்துவம், தொடர்பாடல் போன்ற மென்திறன்களை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். கல்வியில் தொழில்நுட்ப பயன்பாடு, டிஜிட்டல் கல்வியறிவு, மொழித்திறன்கள், மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமித்து, கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதோடு, கிராமப்புற ஆசிரியர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து, அனைத்து பிரதேசங்களிலும் உள்ள மாணவர்களுக்கும், குறிப்பாக, பெண்கள் மற்றும் விளிம்புநிலைக் குழுக்களுக்கும் தரமான கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். 'பட்டங்களுக்கான கேள்வி" என்பதை விட, "திறனை விருத்தி செய்யும் கல்விக்கான கேள்வி"யை உருவாக்கும் சமூக மாற்றமும் அவசியம். இவ்வாறான சீர்திருத்தங்கள் மூலம், இலங்கையின் கல்வித் துறைக்கும் தொழிற்றுறைக்கும் இடையில் நிலவும் பாரிய இடைவெளியை இல்லாமல் செய்து, ஒரு திறன்மிக்க, போட்டித்தன்மை வாய்ந்த தொழிற்படையை உருவாக்க முடியும். இந்தச் சீர்திருத்தங்கள், இலங்கை இளைஞர்கள் உலக அரங்கில் போட்டி போடவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் வழிவகுக்கும்.












# இறுதி ரந்தோலி பெரஹெரா

கண்டியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையின் இறுதி ரந்தோலி பெரஹெரா வெள்ளிக்கிழமை (08) இரவு நடைபெற்றதுடன் இதில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கலந்துக்கொண்டார்.

புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் குழுவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் நான்கு மகா தேவாலயங்களின் வருடாந்த எசல மகா பெரஹெரா, பண்டைய முறைமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் சம்பிரதாயபூர்வமாகச் சனிக்கிழமை (09) பிற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

"இருபதாம் நூற்றாண்டின் வெற்றிகள் மற்றும் நமது வரலாற்று பாரம்பரியத்தின் அடிப்படையில் நாம் ஒரு தனித்துவமான தேசமாக நம்மைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும், இந்தத் தலதா பெரஹெரா நிகழ்வு இதில் ஒரு மைல்கல் என்றும், நாட்டின் எதிர்காலத்திற்காக இதுபோன்ற கலாசார நிகழ்வுகள் பொதுமக்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றப்பட வேண்டும்" என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

"எசல பெரஹெராவை வெற்றிகரமாக ஒழுங்கமைப்பதில் வழிகாட்டுதலை வழங்கிய மல்வத்து–அஸ்கிரிய மகா நாயக்க தேரர்கள் தலைமையிலான இரு மகா விஹாரைகளின் மகா சங்கத்தினருக்கும், அதற்காக அர்ப்பணித்த தியவடன நிலமே உட்பட ஆதரவளித்த அனைவருக்கும், நான்கு மகா தேவாலயங்களின் நிலமேமார்களுக்கும், பெரஹெராவில் பங்கேற்ற கலைஞர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் குறிப்பிட்டார்.











# அலரி மாளிகைக்கு முன் வீதி உலா சென்ற வேலாயுதர்





கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயிலின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவையொட்டி வியாழக்கிழமை (07) அன்று அலரி மாளிகைக்கு முன்பாக வீதி உலா சென்ற தேர்ப் பவனியில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டு கோயில் தேருக்கு அர்ச்சனைத் தட்டு வழங்கி வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நாதஸ்வர இசை முழங்க, பிரதமரை வேல் ரதத்திற்கு அருகாமையில் அழைத்துச் சென்று, அவரிடம் அர்ச்சனைத் தட்டை பெற்றுக்கொண்டனர். பின்னர், அலரி மாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த விசேட பீடத்திற்கு அழைத்துச் சென்று, பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் ஆசீர்வாதம் வேண்டி, விசேட பூஜை ரமேஷ் குருக்களினால் நடத்தப்பட்டது.

இந்த விசேட ஆசீர்வாத பூஜையைத் தொடர்ந்து, பாரம்பரிய முறைப்படி நாதஸ்வர இசை முழங்க, பிரதமரை மீண்டும் அலரி மாளிகைக்கு அழைத்துச் செல்ல, தேர்த்திருவிழாவின் ஏற்பாட்டுக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது, பிரதமர் ஏற்பாட்டுக் குழுவினருக்குத் தனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

பிரதமருடன் பிரதமர் செயலாளர் பிரதீப் சபுதந்திரியும் பிரதமரின் அலுவலக ஊழியர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.











# ஸ்ரீ கதிர்வேலாயுத தேர் பவனியில் ஜனாதிபதி செயலாளர் வழிபாடு



கொழும்பு, சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா தேர்பவனியையொட்டி வியாழக்கிழமை (07) அன்று ஜனாதிபதி அலுவலகத்திற்கு முன்பாக வீதி வலம் வந்த தேர்பவனிக்கு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மலர் வைத்து வழிபாடுகளில் ஈடுபட்டார். மேலும் இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



















கின்ஷாசா

# கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில் 80 பேர் பலி



கத்தார் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில், ருவாண்டா ஆதரவு கிளர்ச்சியாளர்கள், கொங்கோவில் சுமார் 80 பேரைக் கொன்றுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் கிழக்குப்பகுதி கனிம வளங்கள் நிறைந்தவை. அவற்றை கைப்பற்ற 100க்கும் மேற்பட்ட கிளர்ச்சிப் படைகள் முயற்சிக்கின்றன. நீண்ட காலமாக அங்கு தொடர்ந்து போர் நீடிக்கிறது.

சமீபத்தில், அண்டை நாடான ருவாண்டா வின் ஆதரவு பெற்ற, 'எம் - 23' கிளர்ச்சிப் படையினர், காங்கோவின் இரண்டு முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ளனர்.

கொங்கோ நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதலில் பலர் கொல்லப்படுகின்றனர். மோதல் காரணமாக இலட்சக் கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும், சிறார் உட்பட இளைஞர்களை தங்கள் சட்டவிரோத அமைப்பில் சேர கிளர்ச்சிப்படை கட்டாயப்படுத்தி வருகிறது.

மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில், கத்தார் தலைமையில் காங்கோ, ருவாண்டா இடையே அமைதிப் பேச்சு நடந்து வருகிறது.

எதிர்வரும் 18ஆம் திகதிக்குள் காங்கோவையும் கிளர்ச்சியாளர்களையும் நிரந்தர அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட கத்தார் முயற்சித்து வருகிறது. பொதுமக்களைப் பாதுகாப்பதும், மோதலால் இடம்பெயர்ந்தவர்களை பாதுகாப்பாக நாடு திரும்ப வைப்பதும் இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த நிலையில், நியாபோரோங்கோ, லும்பிஷி உள்ளிட்ட கிராமங்களில், 'எம் - 23' கிளர்ச்சிப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் குழந்தைகள் உட்பட 80 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான்

## இந்திய வான்வெளியை மூடியதால்

# 2 மாதங்களில் 127 கோடி ரூபாய் இழப்பு

இந்தியாவுடன் மோதல் போக்கை கொண்டுள்ள பாகிஸ்தான் இரண்டு மாதங்களில் 127 கோடி ரூபாய் இழப்பை சந்தித்துள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு பாடம் கற்பிக்க இந்தியா சிந்து நதி நீரை நிறுத்தியது.

அதைத்தொடர்ந்து பாகிஸ்தான் இந்திய விமானங்கள் பயன்படுத்த முடியாதபடி அதன் வான்வெளியை மூடியது.

இந்திய விமானங்கள் இயக்கப்படாததால் கடந்த ஏப்ரல் 24 முதல் ஜூன் 30 வரை பாகிஸ்தான் 127 கோடி ரூபாய் இழப்பை சந்தித்தது.

பாகிஸ்தான் பாராளுமன்ற கூட்டத்தில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது. இழப்புகள் இருந்த போதிலும் பாகிஸ்தான் விமான நிலைய ஆணையத்தின் ஒட்டுமொத்த வருவாய் 2019 இல் 508,000 டாலரிலிருந்து 2025 இல் 760,000 டாலராக அதிகரித்துள்ளது.



டெல் அவிவ்

# "இஸ்ரேலின் முடிவு ஆபத்தானது"

காசா நகரத்தை முழுமையாக கைப்பற்றும் இஸ்ரேலின் முடிவு, பாலஸ்தீனியர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கும் ஆபத்தான ஆக்கிரமிப்பு என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளார்.

காசாவை முழுமையாகக் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்மொழிந்த முடிவுக்கு அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கு பல முனைகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. சீனா, துருக்கி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்



அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்ட அறிக்கையில், "இஸ்ரேல் அரசாங்கம் காசா நகரத்தைக் முழுமையாக கைப்பற்றும் முடிவால் நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். இந்த முடிவு ஆபத்தான ஆக்கிரமிப்பு ஆகும். ஏற்கெனவே பேரழிவில் சிக்கியுள்ள இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களின் வாழ்வை இது மேலும் ஆபத்தில் ஆழ்த்தும். மீதமுள்ள பணயக்கைதிகள் உட்பட மேலும் பல உயிர்களுக்கு இது ஆபத்தை விளைவிக்கும்.

காசா நகரத்தைக் கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டம் பொதுமக்கள் மற்றும் பணயக்கைதிகளுக்கு அச்சத்தைத் தூண்டுகிறது. காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து பயங்கரமான பேரழிவை சந்தித்து வருகின்றனர். நிரந்தர போர்நிறுத்தம், காசா முழுவதும் தடையற்ற மனிதாபிமான உதவிகள் மற்றும் அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவித்தல் ஆகியவற்றை உடனே செய்யவேண்டும். சர்வதேச சட்டத்துக்கு இஸ்ரேல் கீழ்ப்படிய வேண்டும். இந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவராமல், இந்த மோதலுக்கு நிலையான தீர்வு கிடைக்காது. காசா பாலஸ்தீன அரசின் ஒருங்கிணைந்த பகுதியாகும், அது அவ்வாறே தொடர்ந்து இருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

சென்னை

# "ஆப்பரேஷன் சிந்தூர் ஒரு சதுரங்க விளையாட்டு"

ஆப்பரேஷன் சிந்தூரில் நாங்கள் சதுரங்க விளையாட்டு போல சாதுர்யமாக விளையாடினோம் என இராணுவத் தலைமை தளபதி உபேந்திர திவேதி தெரிவித்துள்ளார்.

சென்னை ஐஐடியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இராணுவத் தலைமைத் தளபதி உபேந்திர திவேதி பேசியதாவது: ஆப்பரேஷன் சிந்தூரில், நாங்கள் சதுரங்கம் விளையாடினோம். எதிரியின் அடுத்த நகர்வு என்னவாக இருக்கும், என்ன செய்யப் போகிறோம் என்பது எங்களுக்குத் தெரியாது. இது கிரே சோன் (Grey zone) என்று அழைக்கப்படுகிறது. கிரேசோன் என்றால் நாம் வழக்கமான



நடவடிக்கைகளுக்கு அல்ல. நமது வழக்கமான நடவடிக்கையை விட வித்தியாசமானது. நாங்கள் சதுரங்க நகர்வுகளைச் செய்து கொண்டிருந்தோம். அவர்களும் (எதிரி) சதுரங்க நகர்வுகளைச் செய்து கொண்டிருந்தார். எங்கோ நாங்கள் அவர்களுக்கு செக்மேட்டைக் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையை செயல்படுத்த பாதுகாப்பு படையினருக்கு இந்திய அரசு அதிகாரம் அளித்தது. ஏப்ரல் 22ஆம் திகதி அன்று பஹல்காமில் நடந்தது நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மறுநாளே, 23ஆம் திகதி, நாங்கள் அனைவரும் அமர்ந்தோம். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், 'எல்லாம் போதும் போதும்' என்று கூறியது இதுவே முதல் முறை. சுதந்திரமான முறையில் செயல்பட உத்தரவுகள் வழங்கப்பட்டன. என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.' அந்த வகையான நம்பிக்கை, அரசியல் தெளிவை நாங்கள் முதன்முறையாகக் கண்டோம் என்றார்.

# சென்னை சுப்பர் கிங்ஸிலிருந்து விலகும் அஷ்வின்

இதுவரையில் உறுதி படுத்தப்படாதபோதும் இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிலிருந்து இரவிச்சந்திரன் அஷ்வின் விலகுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

எதற்காக சென்னையிலிருந்து 38 வயதான அஷ்வின் விலகுகிறாரென்பது உடனடியாகத் தெரியாதபோதும், தனது விலகும் முடிவை அவர் அணியிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னையின் அதிகாரிகள், அணித்தலைவர் மகேந்திர சிங் டோணி, முன்னாள் அணித்தலைவர் ருத்துராஜ் கைகவாட் உள்ளடங்கலான வீரர்கள் சென்னையில் கடந்த சில நாள்களாக சந்திப்பை மேற்கொண்டுள்ளனர்.

ஐ.பி.எல்லின் 221 போட்டிகளில் ஓவருக்கு 7.29 ஓட்டங்களையே விட்டுக் கொடுத்து 187 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அஷ்வின், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்தாண்டே சென்னையால் 9.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு வாங்கப்பட்ட பின்னர் அவ்வணிக்குத் திரும்பியிருந்தார்.

இதேவேளை, இன்னொரு ஐ.பி.எல். அணியான ராஜஸ்தான் றோயல்ஸின் அணித்தலைவரான சஞ்சு சாம்சனும் தன்னை அணியிலிருந்து விடுவிக்குமாறு கோரியுள்ளார்.



# அல்-ஹிலாலில் இணைந்த லிவர்பூலின் நுனேஸ்

சவூதி அரேபிய கால்பந்தாட்டக் கழகமான அல்-ஹிலாலில் மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான டர்வின் நுனேஸ் இணைந்துள்ளதாக இரண்டு கழகங்களும் சனிக்கிழமை (09) அன்று தெரிவித்துள்ளன.

ஒப்பந்தத்தின் நிதித் தகவல்கள் வெளிப்படுத்தப்படாதபோதும் 53 மில்லியன் யூரோக்களோடு, சில அடைவு மட்டங்களுக்கான தொகைகளோடு 26 வயதான நுனேஸுக்கான இறுதித் தொகை 56.6 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லிவர்பூலின் 2022ஆம் ஆண்டு இணைந்த நுனேஸ் 143 போட்டிகளில் 40 கோல்களைப் பெற்றதோடு, 26 கோல்களைப் பெற உதவிய நிலையில் கடந்த பருவகாலத்தில் எட்டு லீக் போட்டிகளையே ஆரம்பித்து ஐந்து கோல்களைப் பெற்றிருந்தார்.



## சிம்பாவேவுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து

சிம்பாவேவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த நியூசிலாந்து, புலவாயோவில் வியாழக்கிழமை(07) ஆரம்பித்து சனிக்கிழமை (09) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 125/10 (துடுப்பாட்டம்: பிரெண்டன் டெய்லர் 44, தஃபடஸ்வா டிசிகா ஆ.இ 33 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 5/40, ஸகரி போக்ஸ் 4/38, மத்தியூ பிஷர் 1/16)

நியூசிலாந்து: 601/3 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர ஆ.இ 165, டெவொன் கொன்வே 153, ஹென்றி நிக்கொல்ஸ் ஆ.இ 150, வில் யங் 74, ஜேக்கப் டஃபி 36 ஓட்டங்கள்)

சிம்பாப்வே: 117/10 (துடுப்பாட்டம்: நிக் வெல்ச் ஆ.இ 47 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸகரி போக்ஸ் 5/37, மற் ஹென்றி 2/16, ஜேக்கப் டஃபி 2/28, மத்தியூ பிஷர் 1/22)

போட்டியின் நாயகன்: டெவொன் கொன்வே

தொடரின் நாயகன்: மற் ஹென்றி.

# நியூகாசிலை வென்ற அத்லெட்டிகோ மட்ரிட்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் சனிக்கிழமை (09) நடைபெற்ற அவ்வணியுடனான சிநேகபூர்வ போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

அத்லெட்டிகோ சார்பாக ஜூலியன் அல்வரேஸ், அந்தோனி கிறீஸ்மன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் அயர்லாந்தில் நடைபெற்ற பிறீமியர் லீக் கழகமான லீட்ஸ் யுனைட்டெட், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுக்கிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இன்னொரு சீரி ஏ கழகமான றோமா வென்றது.

இதுதவிர தமது மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு சீரி ஏ கழகமான பியொரென்டினாவுடனான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் வழமையான நேரத்தில் சமநிலையில் முடிவடைந்த நிலையில் பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 11, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.